DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பெரியபாண்டி | Father/Husband Name : அழகுமலை |
| Age : 37 | Village : முத்தார்பட்டி |
| Taluk : | Calling : திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10 Aug 2026 15:25

<u>3 வது எதிரியின் முதல் விசாரணை</u> :-

1. நான் முத்தார்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன்.

2. சம்பவம் நடைபெற்ற நாளான 04.06.2023ம் தேதியன்று மாலை 06.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கான டைல்ஸ் ஓடு ஏற்றிக்கொண்டு நான்கு சக்கர வாகனத்தினை பந்தல்குடி பிரதான சாலையிலிருந்து எங்களுக்கு பாத்தியப்பட்ட 6 அடி பாதையில் நான்கு சக்கர ஆட்டோவை பின்நோக்கி இயக்கி எங்கள் வீட்டின் அருகில் உள்ள 6 அடி பாதையில் ஒருவர் செல்லும் இடம் விட்டு நிறுத்தி டைல்ஸ் கற்களை இறக்கி வைத்துக்கொண்டிருந்தோம்.

3. அந்த நேரத்தில் ராமலட்சுமி என்பவர் தலையில் ஆட்டுக்கு தீவணத்தை கொண்டு சென்றுகொண்டிருந்தபோது எனது தங்கைகளான சின்னபாண்டியம்மாள், சந்தனமாரியை உடம்பில் உரசிக்கொண்டு அவர் வீட்டுக்கு போன பின்னர், சின்னப்பாண்டியம்மாளை பார்த்து நீ ஓடிப்போய் இரண்டு குட்டிகளை பெற்றவள்தானே , தேவிடியா தானே என்று கேட்டார். சந்தனமாரியை பார்த்து 7 வருடமாகியும் உனக்கு குழந்தை குட்டி இல்லை என்றும், தேவிடியா என்றும் கேட்டார்.

4. இதனை கேட்ட எனது தங்கைகள் சின்னபாண்டியம்மாளும், சந்தனமாரியும் அவர்களிடம் போய் ஏன் இவ்வாறு தேவையில்லாமல் கெட்ட வார்த்தைகள் பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு ராமலட்சுமி அப்படிதான் பேசுவேன் என்றும், ஆவேசமாக இருவரின் தலைமுடியையும் பிடித்துக்கொண்டு சண்டையிட்டார். அதனை எனது அம்மாவான பொன்அழகம்மாள் விலக்கிவிட சென்றபோது எனது அம்மாவையும் காலால் மிதித்து தள்ளிவிட்டார். இதில் அவரது உறவினரான சீதாலட்சுமியும் சேர்ந்து சண்டைக்கு வந்தார்.

5. அப்போது சீதாலட்சுமி எனது அம்மாவை தாக்க வந்தபோது எனது அப்பாவான அழகுமலை என்பவர் அவரிடமிருந்து எனது அம்மாவை காப்பாற்றி வீட்டிற்கு அழைத்து வந்தார். நான் அதற்கடுத்து டைல்ஸ் கல் இறக்குவதை விட்டுவிட்டு சென்று ராமலட்சுமியின் கைப்பிடியில் இருந்த எனது தங்கைகளான சின்னபாண்டியம்மா, சந்தனமாரி ஆகிய இருவரையும் விட்டுவிடு என்று கூறியதற்கு அவர் என்னை பார்த்து முத்தரை நகரில் உள்ள எனது சொந்தக்காரர்களை இந்த 6 அடி பாதையில் நடக்கவிடவேண்டும் என்று கூறினார். அதோடு மட்டுமல்லாமல் நீங்கள் எங்கள் மீது வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் புகார் கொடுத்ததை திரும்ப பெறவேண்டும்

என்று கூறினார்.

6. நான் அதற்கு இந்த 6 அடி பாதையானது நம்ம 6 பேருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பதை ஏற்கனவே சாத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வழக்கு எண் 64/2014 ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று அவரிடம் கூறினேன். அதற்கு பிறகு நான் எனது இரு தங்கைகளையும் வீட்டிற்கு அழைத்து வரும் வழியிலும் கூட சீதாலட்சுமியின் கணவரான சொக்கலிங்கம் என்பவரும் ஒரு கல்லை எடுத்து எனது அப்பாவை தாக்க வந்துள்ளார். அதோடு மட்டுமல்லாமல் ராமலட்சுமியும் எனது அப்பாவிடம் வாங்கடா சண்டைக்கு என்று வம்பிழுத்தார்.

7. அதன் பிறகு இரவு 08.00 மணிக்கு மேல் எங்கள் ஊர் வைகாசி பொங்கலுக்கு பாதுகாப்புக்கு வந்த இருக்கன்குடி சார்பு ஆய்வாளர் (பெயர் தெரியவில்லை) எங்கள் வீட்டிற்கு வந்து இங்கே பெரியபாண்டி, பொன்அழகம்மாள், சின்னபாண்டியம்மாள் ஆகியோர் யார் என்று கேட்டார்கள். அதற்கு நாங்கள் தான் அவர்கள் என்று போலீசாரிடம் கூறினோம். அதற்கு சார்பு ஆய்வாளர் நீங்கள் ராமலட்சுமியை தாக்கியதாக புகார் கொடுத்துள்ளதாகவும், அது தொடர்பாக நாங்கள் வந்துள்ளோம் என்று கூறினார்கள். நாங்கள் அந்த சார்பு ஆய்வாளரிடம் அவர்கள் வாய்தாராறு செய்தார்கள், நாங்களும் வாய்தகராறு தான் செய்தோம் என்று கூறினோம்.

8. அதன் பிறகு ராமலட்சுமியிடம் சார்பு ஆய்வாளர் சென்று விசாரணை செய்தார்கள். நாங்களும் அங்கு இருந்தோம். அதற்கு நான் கூறியது, ராமலட்சுமி என்பவர் முத்தரையர் நகரில் உள்ள அவரது சொந்தக்காரர்கள் இந்த 6 அடி பாதையில் நடக்க வேண்டும் என்று எங்களிடம் ராமலட்சுமி கூறினார், அதற்கு நாங்கள் விடமாட்டோம் என்று சார்பு ஆய்வாளரிடம் கூறினோம். இந்த 6 அடி பாதையானது கோடாங்கி பாலுச்சாமி, முருகாயி, பாலுமணி, சொக்கலிங்கம், கருப்பசாமி மற்றும் அழகுமலை ஆகிய 6 பேருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று கூறினோம்.

9. அதற்கு பிறகு ராமலெட்சுமி மற்றும் சொக்கலிங்கத்திடம் விசாரணை செய்தபோது அவர்களும் இந்த இடம் மற்றும் பாதை பிரச்சனை காரணமாக நாங்கள் வாய்தகராறு மட்டும் தான் செய்தோம் என்றும், எந்த அடிதடியும் நடக்கவில்லை என்றும் சார்பு ஆய்வாளரிடம் கூறினார்கள். அங்கே சீதாலட்சுமி, சின்ராசு என்பவரும் சார்பு ஆய்வாளர் விசாரணையின் போது இருந்தார்கள்.

10. அதன் பின் சார்பு ஆய்வாளர், உங்களுக்கு முத்தரையர் நகரில் உள்ள உங்களது சொந்தக்காரர்கள் இந்த 6 அடி பாதையில் நடக்கவிடவேண்டும் என்றால் நீங்கள் சாத்தூர் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி தீர்வு காணுங்கள் என்று அவர்களிடம் கூறினார். அதற்கு பிறகு இந்த 6 அடி பாதை பிரச்சனையை பேசி, முடித்து இனிமேல் இரண்டு பேரும் சண்டை சச்சரவு இல்லாமல் இருங்கள் என்று கூறினார். இந்த பிரச்சனை 04.06.2023 அன்றே காவல் சார்பு ஆய்வாளர் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது.

11. அதன் பிறகு 05.06.2023ம் தேதி விசாரணை அதிகாரியான காவல் சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் இரவு 09.00 மணிக்கு மேல் எங்கள் வீட்டிற்கு வந்து இங்கு ராமலட்சுமியை யார் அடித்தார்கள் என்று மிரட்டிக்கேட்டார். அதற்கு எனது அம்மாவான பொன் அழகம்மாள் "ஐயா நாங்கள் இந்த பிரச்சனையை 04.06.2023ம் தேதி அன்றே வாய்தகராறு மட்டும் தான் பேசினோம் என்று சார்பு ஆய்வாளர் முன்னிலையில் பேசி முடித்துவிட்டோம்" என்று கூறினார். அதன் பிறகு ராமலட்சுமியின் வீட்டிற்கு சார்பு

ஆய்வாளர் விசாரணைக்கு சென்றார்.

12. எனது அம்மா பொன்அழகம்மாள் எங்களுடைய திண்ணையில் உட்கார்ந்து அவர்கள் பேசுவதை கேட்டுக்கொண்டிருந்தார். ராமலட்சுமி என்பவர் காவல் சார்பு ஆய்வாளரிடம் "ஏன் சார் இவர்கள் எல்லோர் மீதும் பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ள முடியாதா" என்று கேட்டதற்கு, சார்பு ஆய்வாளர் அப்படியெல்லாம் பொய் கேஸ் போட முடியாது என்று அவரிடம் கூறினார். அதன் பிறகு ராமலட்சுமி சார்பு ஆய்வாளரிடம் நான் ரூ.50,000/- லஞ்சம் தருகிறேன், இதை வைத்துக்கொண்டு அவர்கள் மீது பொய் கேஸ் போடுங்கள் என்று கூறினார். அதற்கு சார்பு ஆய்வாளர் அப்படியென்றால் நான் சொல்வதுபோல் நீ கேள் என்று கூறி "நீ உன்னுடைய நைட்டியை கிழித்துக்கொண்டு, கையில் பேண்டேஜ் ஒட்டி சாத்தூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று சான்றிதழ் கொண்டு வா, நான் அவர்கள் எல்லோர் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்து, அவர்களை கோர்ட்டுக்கு அலைய வைத்துவிடலாம்" என்று கூறினார்.

13. அந்த வழியாக சார்பு ஆய்வாளர் வரும்போது எனது அம்மா பொன் அழகம்மாள் "ஏயா சட்டத்தை காப்பாத்துவர்களே இப்படி கூறலாமா" என்று கேட்டதற்கு உங்களையெல்லாமல் ரிமாண்ட் செய்து உள்ளே வைத்து கோர்ட்டுக்கு அலைய வைக்கவேண்டும் என்று மிரட்டி கூறினார். நாங்களும் இந்த பிரச்சனை இதோடு முடிந்துவிட்டது என்று அவரவர் வேலைக்கு வெளியூர் சென்றுவிட்டோம்.

14. எனக்கு 05.10.2023ம் தேதி இருக்கன்குடி காவல்நிலையத்திலிருந்து போன் செய்து உங்கள் அப்பா, அம்மா இருவரையும் கையெழுத்து போட வரச்சொல்லுங்கள் என்று மகளிர் காவலர் ஒருவர் கூறினார். நான் என்ன காரணத்திற்கு என்று கேட்டதற்கு அவர்கள் ராமலட்சுமி என்பவரை நீங்கள் அடித்தற்கு என்று கூறினார். நாங்கள் அடுத்த நாளான 13.10.2023ம் தேதியன்று நான், எனது அப்பா, அம்மா ஆகிய மூவரும் இருக்கன்குடி காவல்நிலையத்தில் ஆஜரானோம்.

15. அங்கு விசாரணை அதிகாரியான ராஜ்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் வேல்முருகன், எழுத்தர் முருகன் ஆகியோர் இருந்தார்கள். அவர்களிடம் நாங்கள் என்ன பிரச்சனை செய்தோம், எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் மூவரும் ராமலட்சுமி என்பவரை நீங்கள் தாக்கியுள்ளீர்கள், அதனால் தான் என்று கூறினார்கள். நான் அதற்கு அன்றைக்கே (04.06.2023) வந்த காவல் சார்பு ஆய்வாளரிடம் வாய் தகராறு மட்டும் தான் செய்தோம் இருவரும் என்று கூறி அன்றே அந்த பிரச்சனையை முடித்து வைத்துவிட்டார்கள். இப்படி முடித்த பிரச்சனையை எங்கள் மீது பொய்யாக ஏன் வழக்கு பதிவு செய்துள்ளீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் மூவரும் ஒழுங்கா கையெழுத்து போட்டு போறீங்களா இல்லையா, இல்லைனா உங்களை ரீமான்ட் செய்து நொங்கை கழட்டிவிடுவோம் என்று மிரட்டி, வற்புறுத்தி எங்கள் மூவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள்.

16. அதன் பின் விசாரணை அதிகாரியான ராஜ்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் வேல்முருகன், எழுத்தர் முருகன் ஆகிய மூவரும் சேர்ந்து உங்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க ஆளுக்கு ரூ.30,000/- கொடுங்கள் என்று இலஞ்சம் கேட்டார்கள். அதற்கு நான் எங்கள் மீது நீங்களே பொய் வழக்கு போட்டுள்ளீர்கள், நாங்கள் எதற்கு உங்களுக்கு பணம் தர வேண்டும் என்று கூறினேன். இப்படி வாய் பேசுனீங்கனா உங்களை கைது செய்து ரீமான்ட் செய்துவிடுவோம் என்று மறுபடியும் மிரட்டினார்கள். அதன் பின்னர்

எங்கள் மூவரையும் ஒரு புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். நாங்கள் விசாரணை முடித்து வீட்டிற்கு வந்துவிட்டோம்.

17. அதன் பின்னர் 14.06.2024ம் தேதியன்று, கிட்டதட்ட ஒருவருடம் கழித்து, அதே வைகாசி பொங்கல் அன்று எங்களுடைய வீட்டிற்கு வந்து இருக்கன்குடி காவலர்கள் இங்கு சின்னப்பாண்டியம்மாள், சந்தனமாரி யார் என்று மிரட்டிக்கேட்டார்கள். அதற்கு சின்னப்பாண்டியம்மாளும், சந்தனமாரியும் நாங்கள் தான் என்று கூறிய பின்னர் நீங்கள் இருவரும் இருக்கன்குடி காவல்நிலையத்திற்கு கையெழுத்து போட வரவேண்டும் என்று கூறினார்கள். அதற்கு இருவரும் நாங்கள் இருசக்கர வாகனத்தில் வருகிறோம் என்று கூறியதற்கு எங்கள் கூட வருகிறீர்களா இல்லையென்றால் உங்களை ரீமான்ட் செய்து உள்ள தூக்கி வைக்கனுமா என்று மிரட்டினார்கள். அதோடு மட்டும்மல்லாமல் அவர்கள் இருவரையும் மகளிர் காவலர்கொண்டு ஆட்டோவில் வம்படியாக ஏற்றினார்கள். அங்கு இருக்கன்குடி காவல்நிலையத்தில் மாலை 06.00 மணிக்கு ஆஜரானார்கள்.

18. அங்கு போய் விசாரணை செய்ததில் சந்தனமாரியிடம் ரூ.4,000/- லஞ்சம் கொடு என்றும், உனது வீட்டுக்காரரான நடராஜிடம் போய் பேனா, பென்சில், ரப்பர் ஆகியவற்றை வாங்கி வரக்கூறு என்று மிரட்டியுள்ளார்கள். சின்னப்பாண்டியம்மாளிடம் ரூ.4,000/- லஞ்சம் கொடு என்றும், உனது கழுத்தில் உள்ள செயின், மோதிரம், கம்மல் ஆகியவற்றை கழற்றிவை என்றும் மிரட்டியுள்ளார்கள். அதோடுமட்டுமல்லாமல் நீங்கள் இந்த பணம் மற்றும் ஆபரணங்கள் அனைத்தையும் எவனோ ஒருத்தனிடம் படுத்து தானே சம்பாதித்தீங்க என்று அறுவறுப்பாக பேசியுள்ளார்கள். (மேற்படி சங்கதிகள் இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லை என்ற காரணத்தினால் நிராகரிக்கப்படுகிறது. சாட்சி கூறும் லஞ்சம் தொடர்பான புகார்களை அவர் சம்பந்தப்பட்ட அதிகாரியடம் முறையிட அறிவுறுத்தப்படுகிறது. 09.07.2026ம் தேதி சம்பவம் நடைபெற்றதாக சாட்சி கூறினார். அதுவும் இந்த வழக்கு சங்கதிக்கு தொடர்பற்றது என்பதால் அது நிராகரிக்கப்படுகிறது)

19. சம்பவ தேதியில் சின்னபாண்டியம்மாளும், பெரியபாண்டியும் ராமலட்சுமி என்பவரின் நைட்டியை கிழித்தார்கள் என்று கூறுவது முழுவதும் பொய்யானது. நாங்கள் இரண்டு அடி இடம் போட்டு தான் வீடு கட்டியுள்ளோம். இதில் வெள்ளைச்சாமி மகன் கணேசன் என்பவர் ஆட்டோவில் டைல்ஸ் கற்களை ஏற்றிக்கொண்டு வேகமாக ராமலட்சுமி மீது மோதும்படி வந்ததாக ராமலட்சுமி கூறியது முற்றிலும் தவறானது. வெள்ளைச்சாமி மகன் கணேசன் எனபவர் அன்றையதினம் அந்த இடத்தில் கிடையாது. வெள்ளைச்சாமி மகன் கணேசன் என்பவர் அழகுமலையின் மூத்த மருமகன் ஆவார். அவர் வதுவார்பட்டியை சேர்ந்தவர் ஆவார்.

20. விசாரணை அதிகாரியான ராஜ்குமார் சரியாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கையில் எங்களுடைய பெயரை, சின்னப்பாண்டியம்மாள் என்பதற்கு பாண்டியம்மாள் என்றும், பொன் அழகம்மாள் என்பதற்கு அழகம்மாள் என்றும் மாற்றி பதிவு செய்துள்ளார். அதோடு மட்டுமல்லாமல் விசாரணை அதிகாரியான ராஜ்குமார் எங்களுடைய இடத்திற்கு வந்து விசாரணை செய்யவில்லை. அப்படி அவர் விசாரணை செய்திருந்தால் கோடாங்கி பாலுச்சாமி, முருகாயி, பாலுமணி, மருதன், சொக்கலிங்கம் ஆகியோருடைய வீடு எங்கு இருக்கிறது என்று அவருக்கு தெரிந்திருக்கும்.

21. விசாரணை அதிகாரி ராஜ்குமார் தயார் செய்த மகஜரில் தவறு ஏற்பட்டுள்ளது. இதில் கோடாங்கி பாலுச்சாமியின் மருமகள் தான் லட்சுமி, முருகாயி

மருமகள் தான் அழகுசுந்தரி – இவர்கள் இருவரிடம் தான் மகஜரில் கையெழுத்து பெற்றுள்ளார். அவ்வாறு கையெழுத்து பெற்றுள்ள விசாரணை அதிகாரிக்கு அவர்களுடைய வீடு எங்கு இருக்கிறது என்று கூட அவருக்கு தெரியவில்லை. விசாரணை அதிகாரி ராஜ்குமார் மகஜர் வரைபடத்தில் எங்களுக்கு பாத்தியப்பட்ட 6 அடி பாதையில் ராமலட்சுமி என்பவர் சிமெண்ட் சுவர் கட்டி மின் கம்பம் அமைத்து சொந்த பயன்பாட்டிற்காக வைத்துள்ளார். அதையும் அவர் வரைபடத்தில் காண்பிக்கவில்லை. (சாட்சி வழக்கு சம்பவத்திற்கு தொடர்பில்லாத சங்கதிகளை தொடர்ந்து கூறி வருவதால் அவரது முதல் விசாரணை முடிக்கப்படுகிறது). 10 Aug 2026 16:18

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை – 10 Aug 2026 16:23</u>**

22. நான் என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் சாட்சிகள் எங்களை அசிங்கமாக பேசியிருந்தால் அவர்கள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்றால் புகார் கொடுத்தோம், ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த புகார் மனுவின் நகலை இந்த வழக்கில் எங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் புகார் கொடுக்கவில்லை என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல்துறையினர் எங்களுடைய புகாருக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று எங்களுக்கு தெரிய வந்த பிறகாவது எங்களுடைய புகார் தொடர்பான விபரங்களை நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை.

23. நான் புலன்விசாரணை அதிகாரி மற்றும் இதர காவல் துறையை சார்ந்த நபர்கள் மீது கூறியுள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றாலும், அதனால் தான் அது தொடர்பாக நான் காவல் துறையை சார்ந்த உயர் அதிகாரிகளுக்கு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் அளித்துள்ளோம். அந்த மனு நகலையும் எங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் புகார் கொடுக்கவில்லை என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

24. வழக்கு விசாரணையை திசை திருப்பவும், வழக்கில் தீர்ப்பு கொடுப்பதை காலதாமதப்படுத்தவும் நான் மேற்படி சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அளித்த சாட்சியத்திற்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சாட்சிகள் எங்களிடம் எவ்விதமான பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

10 Aug 2026 16:29

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur

// True copy// P.P